# தமிழ்

# மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு

மலர் 3 | பிப்ரவரி 1943 | இதழ் 2

## ஒப்பு நோக்கு

நாகபடலம் — டேரீஜியம்

### இதுவு மதுவா?

ரு. தி.

நாக படலம்:—

கடைக்கண் ணிருபு றத்தில் காணவே சிவப்புத் தோன்றில்
துடைசதை போல வந்து சோதியைத் தின்னு நாளில்
அடைந்திடும் விழிகள் தம்மில் அதிகநீர் தினவு முண்டாம்
நடைபடி குணங்க ளெல்லாம் நாகமாம் படல மாமே.

(பொ-ரை) இரு கடைக் கண்ணிலும் சிவந்து அழுத்தமான சதை வளர்ந்து வந்து வெள்ளை விழி முழுவதையும் கடந்து கரு விழியின் மத்தியிலிருக்கிற பாவையையும் நாட் செல்லச் செல்ல மறைக்கும். கண்களில் நீர்வடியும்; அரிப்புண்டாகும். இவ்வளவு குணங்களு மிருக்குமானல் நாகபடலம் என்று கூறப்படும்

**PTERYGIUM**

"This is a vascularised thickening of the conjunctiva, triangular in shape, situated usually to the inner side of the cornea sometimes to the outer side, but never above or below it.......The growth frequently, but not always, exhibits a tendency to advance into the cornea, the centre of which it seldom reaches, and yet more rarely dœs it extend quite across the cornea....... Sight is not affected unless the pterygium extend over the pupillary region of the cornea.

*Page 97, Swan.*

# செம்பு

R. தியாகராஜன், L.I.M.

செம்பு உலகத்தின் பல பாகங்களிலும் கிடைக்கின்றது. இது ஏராளமாய் வட அமெரிக்காவிலுள்ள Lake Superior என்ற பெரும் நீர்நிலைக் கருகிலுள்ள இடங்களிலும் நேபாளத்திலும் கிடைக்கின்றது. செம்பு சுயமாகவும், பொன், வெள்ளி, வெள்ளீயம், காரீயம், நாகம், இரும்பு, நிமிளை, கெந்தி, பாஷாணம் போன்ற சரக்குகளுடன் கலப்புற்றும் கிடைக்கின்றது. அசல் செம்பை இதர பொருள்களிலிருந்து பிரித்தெடுக்க பல முறைகளை அந்தந்த தேசத்தார் கையாளுகின்றனர். ஆங்கிலேயர் முறைக்கு English Method என்றும் ஜெர்மானியர் முறைக்கு German Method என்றும் கூறுவதால் விளக்கமாகும்.

தமிழ் வைத்திய நூல்களில் பல ஜீவ தாவரப் பொருள்களில் செம்பின் சத்திருப்பதாக கூறப்பட்டிருக்கின்றது. உதாரணமாக நாங்கூழ் புழு (பூநாகம்) இந்திர கோபப்பூச்சி, மயில் இறகு போன்ற ஜீவப் பொருள்களையும்,

"கொவ்வை சிவப்புக் கொடிவேலி சிறுகிரை
செவ்வல்லி கையான் மிரி செந்தரா—யொவ்வுமிடம்
மூக்கி புளிகரணை மூதோ ரிலைச் கஞ்சந்
தேக்கவுரி மூலமிவை செம்பு"

(தே. அந்தாதி.)

என்ற செய்யுளில் கூறிய தாவர சரக்குகளையும் எடுத்துக் கொள்ளலாம். மற்றும் மேற்படி பொருள்களிலிருந்து செம்பின் சத்தை எடுக்கக் கூடிய முறைகளை நிகண்டுகளில் பரக்கக் காணலாம்.

நிற்க செம்பு செங்கபில நிறத்தையும், மினுமினுப்புள்ள பிரகாசத்தையும், துப்புப் பிடிக்கும் தன்மையும் சுத்தியால் அடிக்க அடிக்க அடிபட்ட இடத்தில் பட்டுப்போல் தோன்றும் குணத்தையும் உடையது. மாசற்ற செம்பு கடினமாயிருப்பினும் கத்திவெட்டுக்கு லேசாக வெட்டுப்படும். வெட்டுவாய் செந்நிறமும் பிரகாசமும் பளிங்கு போன்ற தெளிவுங்காட்டும். பிற சரக்குகளுடன் கலப்புற்றிருப்பின் வெட்டுவாய் சிலும்பலாக இருக்கும். செம்பு உருகும்போது பச்சைப்புகை வெளிக்கிளம்பும், ஆறியபின் மேல் பாகத்தில் கருநிற மோடும். ஈரக் காற்றில்லா விடத்தில் இதன் நிறம் வேற்றுமையடைவதில்லை. வெடித் திராவகம் ஒன்றில்தான் கரையும். நெருப்பின் துணையின்றி கறியுப்புத் திராவகத்திலேனும், கெந்தகத் திராவ

கத்திலேனும் கரைபடுவதில்லை. இதில் நாதமுமுண்டு; இக்காரணத்தினாலேயே ஓசை யெழுப்பக் கூட்டுகிற கூட்டு லோகங்களில் இது பிரதானப் படுகிறது. உஷ்ணத்தையும் மின்சாரத்தையும் கிரகிக்கும் தன்மை இதற்குண்டு.

செம்பு அவுதும்பரம், உதும்பரம், இரவி, இராசி, இரவிப் பிரியம், எருவை, சீருணம், சீருணி, சீருள், சுற்பம், சுல்பம், தாமிரம், தாம்பிரம், தாம்பரம், பருதி, வடு, விடம் என்றவேறு பெயர்களினாலும் வழங்கப்படுகின்றது. மற்றும் இதனுடைய பகைச் சரக்குகள் காரீயம், வெடி என்றும், நட்புச் சரக்குகள் அயம், சூதம், தங்கம், நாகம் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

கார்ப்புக் கைப்புச் சுவைகளையுடைய செம்புக்கு வீர்யம் உஷ்ணமென்றும், விபாகம் கார்ப்பு என்றும், செய்கை வறட்சி, வெம்மை என்றும் கூறுவர்.

தாம்பிரம் தீக்கூறின் பால் சேர்ந்தது. இதன் பொதுக் குணத்தைக் கீழ்க்கண்ட செய்யுளினால் அறியலாம்.

தாம்பிரத்தாற் சோரிபித்தஞ் சந்நி யகுவைகபம்
வீம்பார்பி லீகமந்தம் வெண்மேகம்—தேம்பழலை
சூதகநோய் புண்கிரந்தி தோடசுவா சங்கிருமி
தாதுநட்டங் கண்ணோய்போம் சாற்று (ப. கு.)

(பொ. ரை.) செம்பால் இரத்த பித்தம், சந்நி, கல்லீரல் நோய், கபநோய், பிலீகம், அக்கினிமந்தம், வெண்மேகம், பித்த வழலை, சூதக நோய், புண், கிரந்தி, திரிதோட சுவாசம், கிருமி, கண்ணோய் முதலியன தீரும். தாது நஷ்டம் கெடும். எமனுக்கு உயிரை நீக்குந் தன்மையிருப்பதுபோல் செம்பிற்கு குன்மத்தை விரைவில் போக்கக் கூடிய தன்மையிருத்தலின் இதற்கு குன்மகாலன் என்று ஒரு பெயரும் உண்டு. இதனை கீழ்க்கண்ட அடியால் உணரலாம்.

"உற்பவமே தினியநரா மனித வர்க்க
மோகோகோ செம்பினன்மை யுரைக்கொ ணாதே
கற்பனைக ளல்லவடா மகனே குன்ம
காலனென்றால் வாதசந்நி கலங்கும் பாரே"
(போகர் குறுந்திரட்டு 300.)

செம்பை மருந்தாக்கி உபயோகிக்குமுன் சுத்திக்கவேண்டும். "இவ்வகை புரிந்த தாம்பிர பற்பத்தின், இயற்கையை என் சொல்வேன் பிசகில் இடையறு களிம்பால் கொல்லுவததுவே" என்று கூறபட்டிருத்தலின் சுத்தி முறையேனும், பற்ப முறையேனும் பிசகின் செம்புடனே இடைவிடாமல் கூடி இருக்கின்ற களிம்பினால் விடமுண்டாய் இறக்க நேரிடும். (தொடரும்)

# கண்ணோய்கள் அணுகா நெறிகள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

முப்பத்தைந்து வயதுக்குமேல் நாற்பத்தைந்து வயது வரையில் கண்களின் பார்வை சற்று புகைந்து நிற்கும். அதற்குமேல் ஐம்பத்தேழு வயது வரையில் தூரப்பார்வை புகைச்சலோடிருக்கும். பிறகு பார்வை கிரமமாக குறைந்து நூறு வயதானால் பார்வை இருண்டுபோம். இதனைக் கீழ்க்காணும் மேற்கோளாலறிக.

"தெளிவது ஒழியா நிற்கும் தீங்கில்லை முப்பத் தைந்தில்
ஒளியது புகைந்து சற்றே ஒதுங்கிடும் நாற்பத் தைந்தில்
வெளியுறப் புகைந்து காட்டும் மேவிய ஐம்பத் தேழில்
அளியுற விருளுங் கண்டாய் ஆண்டது நூற தாமே"

(அகஸ்தியர் நயனவிதி.)

மேற்கூறியவாறு கண்ணொளி இயற்கையாகவே மங்கிவிடும். அங்ஙனம் மங்காதிருப்பதற்கும், ஒளி பெறுவதற்கும் கீழ்க் கூறப்படும் செயலாதிகளைச் செய்யவேண்டும்.

பற்களைத் தினந்தோறும் காலையில் ஆல், பூலா, வேல் முதலிய குச்சிகள் ஒன்றால் துலக்கவேண்டும். முதலில் இடது பக்கத்தில் தொடங்கி, பிறகு வலது பக்கத்தில் தேய்த்து, நாக்கை வழித்து முறைப்படி வாய்கொப்பளித்து சுத்தஞ் செய்யவும். உண்ட பிறகும் வாய்கொப்பளித்து வாயைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். இரவில் சாப்பிட்டு, கை, வாய் இவைகளைக் கழுவிய பின், ஒவ்வொரு கண்ணிலும் மும்மூன்று துளி சுத்தநீர் விட்டு இமைகளைத் தேய்த்து, சந்திர தரிசனம் செய்வது மிகவும் நன்று. இங்ஙனம் செய்ய அமிர்தயோகமாகும். கைவிரல்களைக் கோத்து பலகணிபோல் செய்து அவ்வழியாய், வானம் சுத்தமாயுள்ள காலத்தில் சந்திரனைக் கடிகை நேரம் பார்த்தல் சந்திர தரிசனமாகும். தரிசனம் செய்தபிறகும் கண்களில் சுத்தநீர் விட்டு அலம்பிச் சற்று இமைகளைப் பிசைந்து விடவேண்டும். மூன்று தினங்களுக்கு ஒரு முறை கண்களுக்கு மை அல்லது அஞ்சனம் தீட்டவேண்டும்; பழக் கிராம்பு பக்குவ வெண்ணெய் மிகவும் நன்று. வாரத்திற்கு இருமுறை எண்ணெய் முழுக்கு நெறியாகச் செய்யவேண்டும். தலைப்பாகை, செருப்பு இவைகளை யணிந்து நடக்கவேண்டும். இரவில் படுக்கைக்குப் போகும்போது உள்ளங்கால்களில் பசு நெய்யை நன்றாய்த் தேய்த்து, ஒருதட்டில் தவிடிட்டு, அதில் பாதங்களை வைக்க தவிடு ஒட்டிக்கொள்ளும். (துண்டுசீலைகளால் இலேசாக கட்டி விடலாம் இப்படிச் செய்ய எலி, பாய்ச்சி முதலியன பாதங்களைக் கடிக்கவோ, அரிக்கவோ செய்யா.) இப்படியே நித்திரை செய்து விழித்து,

குளிர்ந்த நீரால் இரு அடிகளையும் கழுவி, துடைத்து, இழைத்த செஞ்சந்தனத்தைப் பூசவேண்டும். இதனால் அழலை நீங்கும். கண்கள் குளிர்ச்சி பெறும். மத்தியான உணவில் பண்ணைக்கீரை சிறுகீரை, பொன்னாங்காணிக்கீரை இவைகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். இரவில் பால் அன்னமோ, தனிப்பாலையோ முறைப்படி உட்கொள்ளவேண்டும். இருவேளையும் நெய் கலந்து உண்ண வேண்டும்.

"தின்னார் பண்ணைச் சிறுகீரை தின்ன மறந்தார் சீர்கேடாய்
பொன்னாங் காணிக் கறிகூட்டார் பூசார் பாதம் நெய்புண்ணார்
பண்ணார் மதியந் தனைப்பாரார் பால்வார்த் துண்ணார் பல்தேயார்
கண்ணார் நோயாற் கவல்வரதை யாமும் சொல்லக் கடவோமே"

(அகஸ்தியர் நயனவிதி ஐந்நூறு.)

# பல் நோய்

(டாக்டர், நா. சுப்பிரமணியம்)

—:-o-:—

## எதிரதாக் காத்தல்

பல்லழுக்கில் நாவிடத்தில் பாழ்மூத்தாள் பிறந்திடுவாள்;
நல்லுதிர நலன்நீங்கும்; நல்வாயும் பொல்லாமணமாம்;
பல்நோயால் பல்விதத்தும் பல்பிணிகள் பல்கிடுமால்;
பல்லோரும் பாழ்மகளைப் பயிற்றிடா தகற்றிடுவீர்.

வெண்டாமரையில் வீற்றிருப்பாள் நாமகள். செந்தாமரையில் வீற்றிருப்பாள் திருமகள். இது புராணம். வெள்ளிய பற்களிடத்து நா அமர்ந்து விளங்கும். அது செவ்விய ஈறுகளிடத்தும் அமர்ந்ததாகும். அவ்விருவகைத் தாமரை மலர்களும் நீர் ஊறியவண்ணமிருக்கும் வாயாகிய குளத்திடத்தே விளங்குவனவாகும்.

திருப்பாற் கடலில் முதலில் மூதேவி பிறந்தாள். பின் சீதேவி பிறந்தாள். இது புராணம். இனிய நீர் ஊறும் வற்றாத சமுத்திரமாகிய வாயிடத்துப் பற்கள் ஒருபக்கமாகவும் நா ஒருபக்கமாகவும் இருந்து உணவை உமிழ் நீருடன் ஒன்றுசேர ஆக்கி விழுங்க உதவுகின்றன. இக்காரியத்தால் காலையில் முதன் முதலாக வாயிடத்தே பிறந்து தோன்றுவது ஊத்தை. சுத்தஞ்செய்யத் திருவுண்டாகிறது. ஒளிக்கும் இருளுக்கும் இடம் ஒன்றே. ஆனால் ஒன்று போக ஒன்று வரும்.

பல்நோயின் காரணமாக செந்நீர் நலங்கெட்டு வாயும் கெட்ட நாற்றம் எய்திப் பல விதத்தும் உடலகத்துப் பல நோய்கள் பல்கி மலிந்திடும். வாயின் தூய்மையைக் காத்தலாலேயே பல நோய்கள் அணுகாது காத்தல் இயலும்.

வாய்க்கும், மூக்கு, கண், காதுகளுக்கும் நெருங்கிய தொடர்புகள் உண்டு. வாய் கெட்டால் ஐம்பொறிகளும் கெட்டுவிடும்.

இதனாலேயே முதன் முதலாக பல் நோயைப் பற்றி நன்கு அறிவது இன்றியமையாத தாகின்றது. 'ஆலும் வேலும் பல்லுக் குறுதி' என்றபடி ஆல் வேல்களான பற்கொம்புகள் கொண்டு பல் துலக்கல் முதலான முறைகளைக் கையாண்டு பல் நோய்கள் வரா வண்ணம் எதிரதாக் காத்தல் அவசியமாகிறது.

### பல் நோய்களின் தொகையும் வகையும்

அகத்தியர் வைத்திய இரத்தினச் சுருக்கம் ஐந்நூறில் நாக்குப் பல்லு நோய்கள் 76 எனத் தொகை கூறினர். சீவரட்சாமிருதத்தில் அதற்கு நேராக பல்லுகளில் 10-ம், அப் பல்லுகளின் வேரில் 13-ம், நாவில் 6-ம், என 29 ஆகத் தொகுக்கப் பட்டுளது.

பல் நோய்கள் பத்தாவன (சீவரட்)

1 பற்பிளப்பு
2 பற்கூச்சம்
3 பல்வலி (பல்லுளைவு)
4 பல்லசைவு
5 பற்புழு (சொத்தைப் பல்)
6 குட்டிப் பல்
7 பற்காரை
8 பற்றேய்வு, பற்றுளை
9 பற்கருத்தல்
10 வெளிப்பல் (ஈறு கரைவதாலுண்டாம்)

இக்கட்டுரையில் சொத்தைப் பல்லைப்பற்றிச் சிறப்பாக விளக்கப்படும்.

## சொத்தைப் பல்

### பெயர் விளக்கம்

புழு, வண்டுமுதலியன அரித்தது 'சொத்தை' என அறியப் படும். சொத்தை என்ற சொல் 'கொத்தை' என்றதனடியாகப் பிறந்தது. கொத்தப்படுவது கொத்தை. பல், பல காரணங்களால் கொத்துண்டு சொத்தையாகிறது.

### இன்னதென்பது

அநேகமாகச் சிறுவர்களுக்கு ஓரிரண்டு அல்லது பல பற்கள் கருத்துக் குழியாகிச் சில சமயங்களில் மிகுந்த வேதனையைக் கொடுக்கின்றன.

## நோய்க் காரணங்கள்

பல்லானது கல்போன்ற ஒரு பொருளன்று. அதற்கு உணர்ச்சி, வளர்ச்சி, தேய்வு உண்டு.

முக்குற்றம், தேய்தல், கரைதல், புண்ணுதல் காரைபடிதல், அடிபடல், நோய்கள் இவை காரணமாக சொத்தைப் பல் உண்டாகும்.

பாற்பற்கள் முளைத்தல் இருத்தல் விழுதல், பின்வேறு பற்கள் முளைத்தல், நிலைத்தல், விழுதல் என மூவகைச் செயல்கள் உடலில் இயற்கையாக நிகழ்கின்றன. இவ்வியற்கை தடுமாறின் சொத்தைப் பல் முதலிய பல் நோய்களுண்டாகும்.

புளித்த பண்டங்களைக் கடித்தால் பற்களில் கூச்சம் என்ற ஒரு உணர்ச்சி ஏற்படுகிறது. புளிப்பை நினைத்தலாலேயே வாயில் நீர் ஊறுகின்றது. இதனால் புளிப்பு பற்களில் எலும்புச் சத்தைக் கரைக்க வல்லது எனத் தெரிகின்றது. அதன் வல்லமையைக் குறைக்கவே வாய்நீர் உடனே ஊறி புளிப்புச் சுவையின் தன்மையைக் குறைக்கச் செய்கின்றது.

சாம்பல், செங்கல், மண் இவைகொண்டு பற்றேய்த்தாலும் பல் தேய்வுண்டு இவ்வுணர்ச்சியை அதிகப்படுத்தும். இவ்வுணர்ச்சியுள்ள இடத்தில் குளிர்ந்த நீர் பட்டாலும் குளிர்ந்த காற்று அடித்தாலும் கூச்சம் அதிகமாகிறது. இத் தேய்ந்த பாகத்தில் உப்புப் புளிப்புச் சுவைகள் வலியையும் உண்டாக்குகின்றன.

பல்லிடுக்கில் உணவுப் பொருள் தங்கின் அது ஓரிரவுக்குள் புளிப்படைந்து பல்லின் மீது தொழிற்படுகின்றது.

இளங்குழந்தைகள் இனிப்புப் பண்டங்களை விரும்பி யுண்பர். இனிப்புப் வாயில் தேங்குவதால் புளிப்பாகுந் தன்மைத்து.

வாய் இயற்கையில் புளிப்புக்கு மாறான சாரத்தன்மை (alkali) உடையது. சோற்றுப் பை (stomach) காரத்தன்மை (acid) அதாவது புளிப்புத் தன்மை யுடையது.

தோலில் ஏதாவது பட்டுத் தேய்ந்து புண்ணுவது போன்று பல்லுந் தேய்ந்து புண்ணுகும். இவ்விதப் புண்களையே சொத்தை என்னலாம்.

தாம்பூலம் மிகுதியாக வுண்ணும் பழக்கத்தால் எலும்புச் சத்து மிகுதிப்பட்டுப் பற்களில் காரையாகக் கட்டும். அது வச்சிரம் போல் பற்களைப் பிடித்துக் கொள்வதால் பல் வச்சிரக் காரை என்றும் பெயர் பெறும். இக்காரையும் பல்லசைவிற்கும் அழுக்குச் சேர்வதற்கும் காரணமாகிச் சொத்தைப் பல்லுக்கும் காரணமாகும்.

பல்லில் அடிபடலால் பிளப்பாகியும் உடைதலாகியும் சொத்தை யாகலாம்.

மேக நோயுள்ள பெற்றோர்களது பிள்ளைகளுக்குச் சீக்கிரத்தில் பல் முளைத்து சீக்கிரத்தில் சொத்தையாகும்.

சீரண மின்மை, குடற்புழு இவை காரணமாகக் குழந்தைகள் தூக்கத்தில் பற்களை நறநற வெனக் கடிப்பதனாலும் பல் தேய்வுற்றுச் சொத்தை யாகலாம்.

குழந்தைகளது உடல் வளர்ச்சிக் காலத்து எலும்புச் சத்து உடலுக்கு அதிகமாகத் தேவையாகின்றது. இத் தேவையைத் தக்க உணவால் பூர்த்தி செய்யாவிடில் பல் கரைவது இயற்கை.

பெண்கள் சூலுற்ற காலத்தும் புதிய குழந்தைக்கு வேண்டிய எலும்புகள் அமையப் பெறுவதற்கு உணவில் தக்கபடி அச் சத்து இல்லாது போனாலும், உடல் எலும்புகளுடன் பல்லும் கரைவதற்குக் காரணமாகும்.

## கிளை நோய்கள்

மேற்கூறிய காரணங்களால் தோன்றும் சொத்தைப் பல்லுக்குப் பல கிளை நோய்களுண்டு.

ஒரு பல் சொத்தையானாலும் அதை ஒட்டிய மற்றைய பற்களும் பீடிக்கப்படலாம்.

சொத்தையை ஒட்டிய ஈறுகளில் பல்லீற்றுச் சுரப்பு, பல்லரணை, பல்லீற்றுக் கட்டி, பல்லுளைவு இவை உண்டாகும்.

சிலசமயம் கன்னத்தையும் சேர்த்துச் சீழ்க்கட்டி யுண்டாகும். இக்கட்டி கன்னத்தின் வெளிப்புறமாக உடையும்படி விட்டு விட்டால் கன்னத்தில் புரை உண்டாகி உமிழ்நீர் அவ்வழி ஒழுகுவதாகி வெகுநாள் வரை தீராத பிணியாகிவிடும்.

சீழ் சில சமயம் செந்நீரிலும் கலந்து முடக்கு வாதம் போன்ற மூட்டு நோய்களை உண்டாக்கும். இன்னும் வேறு நோய்களையும் உண்டாக்கும்.

சீழ் குடலைச் சார்வதால் குடல் நோய் பல உண்டாகும்.

## நோய்க் கணிப்பு

பல் ஓட்டையாகிக் கருத்துக் குழி விழுந்திருக்கும். சில சமயம் அதிக வேதனையைக் கொடுக்கும். இது கண்டு கணிக்க. மேலும் இந்நோயின் ஆரம்ப நிலை, இடை நிலை, கிளைபாய்ந்த நிலை, கடை நிலை என்ற நிலைகளையும் அவற்றின் குறி குணங்கள் கொண்டு அறிதல் வேண்டும்.

(தொடரும்)